RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s219

OPEN ACCESS

# இலக்கிய நோக்கில் "காரிருளின்" எதிர்மறைக் கதைமாந்தர்

**இரா. வேதகனி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா.

# The Negative Narrator of Novel "Kaarirul" from a Literary Point of View

**R. Vedha Kani** [a, *]

[a] Department Tamil, Pachaiyappas College, Chennai 600030, Tamil Nadu, India

* Corresponding Author: vkanionline@gmail.com

Received: 17-08-2022
Revised: 27-09-2022
Accepted: 10-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

This article is a clear view of the protagonist Valaiyal Seenu in the novel “Kaarirul” by K. Kaliaperumal’s. The novel begins with the protagonist’s story. We can get to know him better through other storytellers who appear in this novel. He is portrayed as irresponsible in his family, a drunkard and a despicable man who seeks out brides. Only Chinnammal, the wife of the protagonist, is seen to have immense love for him. She lives according to the world's convention that her husband is a beholder. The sadness is that Valaiyal Seenu's two daughters never got to experience the love of their father. Finally realizing the love of his wife and loving his children and thinking to spend the rest of his life happily with them, fortunately Valaiyal Seenu gives up his life very pitifully. Although there are many main protagonists in this novel, the reason for taking only one storyteller named Valaiyal Seenu as a research object in this article is because of his realistic character, working every day for his family and the virtue of being an average person who is subjected to some evil morals and then repents and tries to change his life.

**Keywords:** Kaliaperumal, Kaarirul, Character, Valaiyal Seenu

## முன்னுரை

கு. கலியபெருமாள் அவர்களின் படைப்புகளுள் ஒன்று "காரிருள்" என்னும் நாவல். இந்நாவலில் பல முக்கிய கதைமாந்தர்கள் இருப்பினும் இக்கட்டுரையில் வளையல் சீனு எனும் ஒரு கதைமாந்தரை மட்டும் ஆய்வுப் பொருளாக எடுத்து ஆராய்வதன் காரணம் என்னவெனில் கதைமாந்தரின் எதார்த்தமான பண்பும் குடும்பத்திற்காக அன்றாடம் ஓடி உழைக்கும் குணமும் சராசரி மனிதனாக சில தீய ஒழுக்கங்களுக்கு ஆளாகிப் பிறகு மனம் வருந்தி, திருந்தி வாழ நினைக்கும் நல்லுள்ளமும் ஆகும்.

## ஆய்வேட்டின் மதிப்பாய்வுறை

வளையல் சீனு என்னும் கதைமாந்தர் இடம் பெறும் காட்சிகளை நாவலில் வாசிக்கும்போது எதிர்மறையான குணங்களைக் கொண்ட ஒருவனாக காட்சியளித்தாலும், ஆழ்ந்துச் சிந்திக்கும் போது வளையல் சீனு ஒரு எதார்த்தமான கதைமாந்தராக காட்சியளிக்கிறான். அனுபவ அறிவு ஒருவனை நல்லவனாக மாற்றக்கூடும் என்ற பேருண்மையின் கோட்பாட்டினால் வளையல் சீனு மனந்திரும்பி வாழ நினைப்பதால் நேர்மறையான கதைமாந்தராக சித்தரிக்கப்படுவதாக இக்கட்டுரை அமையும் என்று ஆய்வாளரால் கருதப்படுகிறது.

## ஆய்வின் நோக்கமும் பயன்பாடும்

நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பார்கள். இந்த பொன்மொழிக்குச் சிறந்த உதாரணமாக வளையல் சீனுவின் முடிவு அமைகிறது. இந்நாவலாசிரியர் கு. கலியபெருமாள் அவர்கள் வளையல் சீனு என்னும் கதாபாத்திரம் மூலம் நமக்கு கற்பிக்கும் பாடமும் இதுவே ஆகும். இதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பின்வரும் ஆய்வாளர்களுக்காக இந்நாவலில் இன்னும் பல புதுமையான கதைமாந்தர்கள் இடம் பெறுகின்றனர். எதிர்மறையாக இடம் பெறும் கதைமாந்தர்களும் நமக்கு ஒரு படிப்பினையை கற்றுத் தருவதால் அதனையும் நேர்மறையாக எடுத்து ஆய்வு செய்யலாம் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

## ஆய்வின் குறிக்கோள்

ஒருவன் தவறு செய்வதும் பிறகு திருந்தி வாழ்வதும் இயல்பானது தான். இந்த வளையல் சீனுவும் தான் செய்த தவறுகளுக்கு வருத்தப்பட்டுத் திருந்தி வாழ நினைக்கும் போது அவனுக்கு ஏற்படும் முடிவு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது. இதுவே, இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

## வளையல் சீனு - அறிமுகம்

உளுந்தூர்பேட்டையிருந்து சேலம் செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ள ஊர் எலவானாசூர்க்கோட்டை. அந்த ஊரின் பிரதான வீதியில் கடைசியில் இருக்கும் வீடு வளையல் சீனுவின் குடிசை வீடு. இரண்டு பெண் பிள்ளைகளுக்குத் தகப்பன் சீனு. மூன்றாவதாக மீண்டும் ஒரு பெண் பிள்ளையைப் பெற்றெடுக்கப் போகிறோம் என்று தெரியாமல் இருக்கிறாள் நிறைமாத கர்ப்பிணியான சின்னம்மாள், சீனுவின் மனைவி.

## கோபக்காரன்

எல்லா சராசரி மனிதனுக்கும் இருக்கக்கூடிய முன் கோபமும் மூர்க்கத்தனமும் கொண்டவனாகவே சீனு கதாப்பாத்திரம் விளங்குகிறது. இரண்டு பெண் பிள்ளைகளைப் பெற்றதற்காக அடிக்கடி மனைவி சின்னம்மாவை அடித்துத் துன்புறுத்துகிறான். மாரியம்மா, குப்பம்மா இருவரையும் ஒரு நாளும் ஆசையாக தூக்கி கொஞ்சியதே இல்லை. மனைவியை வெறுத்து வீட்டிற்கு வெளியே சுகம் தேடியலைவதற்கு இதுவும் ஒரு காரணமாகவே உணரப்படுகிறது.

## சபலபுத்திக்காரன்

அழகான மனைவி சின்னம்மா இருக்கும் போது அட்டைகரி நிறத்தில் நான்கு பற்கள் வெளியே எட்டிப் பார்க்க நீட்டிக் கொண்டு அவலட்சணமாக இருக்கும் வள்ளியின் மேல் பைத்தியமாக இருக்கிறான். பணத்திற்காக மட்டுமே சீனுவை வீட்டிற்குள் சேர்க்கிறாள், வள்ளி. இந்த உண்மை மிகவும் தாமதமாகவே சீனுவிற்கு தெரிகிறது.

## பொய்யன்

வியாபாரத்திற்கென்று புது வளையல்கள் வாங்க வேண்டும் என்று பொய் சொல்லி சின்னம்மாவின் மூக்குத்தியை நாராயண ரெட்டியின் அடகு கடையில் விற்றுவிட்டு அந்த காசையும் வள்ளிக்குச் செலவு செய்து விடுகிறான்.

"மொய் சிதைக்கும், ஒற்றுமை இன்மை; ஒருவனைப்

பொய் சிதைக்கும் பொன்போலும் மேனியை"

பொய் பேசும் பண்பு ஒருவனுடைய உடம்பை அழிக்கும் என்று நான்மணிக்கடிகையில் விளம்பிநாகனார் கூறுகிறார். சீனு பொய் சொன்னதன் விளைவாக இறந்தப் பின் தன் உடல் அழுகிய நிலையிலேயே அவனுடைய பிணம் காணக்கிடைக்கிறது (Manickam, 2007).

## சீனுவின் மனமாற்றம்

சின்னம்மாவின் மூக்குத்தியை விற்ற காசை வள்ளிக்குச் செலவழிக்கிறான். ஒரு வாரம் கழித்துக் காசு தீர்ந்துவிட்டது என்று தெரிந்தவுடன் வள்ளி தன் அண்ணனுடன் சதி திட்டம் தீட்டுகிறாள். இரவில் சீனு உண்ணும் உணவில் விஷத்தை வைத்து அவனைக் கொன்று விட வேண்டும் என்று இருவரும் இரகசியமாக பேசியதைச் சீனு கேட்டு அதிர்ச்சி அடைகிறான். புத்தி தெளிவு அடைந்து தன் வீட்டை நோக்கி நடையைக் கட்டுகிறான். அன்றிலிருந்து சீனு வள்ளியை அடியோடு மறந்து விடுகிறான் தன்னுடைய குடும்பம் தன்னுடைய குழந்தைகள் தன்னுடைய மனைவி என்ற உணர்வோடு வாழத் தொடங்குகிறான்.

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்

இன்சொல் இழுக்குத் தரும்"

அன்பினால் விருப்பப்படாமல் பொருளுக்காக மட்டுமே விரும்பும் மகளிரின் சொல் இனிமை உண்டாக்காமல் இழிவையே உண்டாக்கும் என்ற குறளுக்கு இலக்கணமாக வள்ளி திகழ்வதை நம்மால் உணர முடிகிறது (Manickam, 2012).

## முன்னேறத் துடிப்பவன்

பணமிருந்தால் தான் தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் உறவுகள் மதிக்கும் என்று உணர்கிறான், சீனு. தானும் இனி வள்ளியைத் தேடிப் போகாமல் தன்னுடைய உழைப்பில் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி மீதம் எடுத்து தன் சொந்த பந்தங்கள் முன்பு மரியாதையாக வாழப்போவதாக உறுதிக் கொள்கிறான். தன் சொந்தங்கள் மத்தியில் தானும் ஒரு நாள் கண்டிப்பாக முன்னேறுவேன் என்று தீர்மானிக்கிறான்.

## கடின உழைப்பாளி

வளையல் மூட்டைகளைத் தலையிலும் தோளிலும் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஒவ்வொரு ஊராகச் சென்று "வளையல் வாங்கலையோ வளையல்" என்று குரல் எழுப்பிக் கொண்டே வீதி வீதியாக சென்று வியாபாரம் செய்யும் திறமைசாலி.

## சீனுவின் முடிவு

எலவனாசூர்கோட்டை ஊரின் சின்ன பண்ணை சிறிதுகாலம் வள்ளியுடன் இரகசிய உறவில் இருந்திருக்கிறான். ஒரு முறை வள்ளி சீனுவுடன் ஒன்றாக வெளியேச் சுற்றுவதைப் பார்த்ததும் சின்ன பண்ணைக்குக் கோபம் தலைக்கேறி சீனுவைக் கொடூரமாகக் கொன்றுக் கல்லைக் கட்டி கிணற்றில் தூக்கி எறிகிறான். சீனுவின் இந்த முடிவை நாவலில் வாசிக்கும்போது சிலப்பதிகாரத்தில் கோவலனின் நிலையை நம்மால் நினைவு கூறாமல் இருக்க முடியாது. கண்ணகியைப் பிரிந்து கோவலன் செல்வத்தை எல்லாவற்றையும் தொலைத்தப் பின் மீண்டும் கண்ணகியுடன் வாழ நினைத்து திரும்பி வந்த பிறகு விதியின் பலனால் உயிர் துறக்கிறான்.

"காவலன் செங்கோல் வளைஇய, வீழ்ந்தனன்,

கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து[3]

திருந்தி வாழ நினைக்கும் போது கோவலன் எவ்வாறு கொல்லப்படுகிறானோ அதுபோல வளையல் சீனுவும் விதியின் வசத்தால் வஞ்சகனால் கொல்லப்படுகிறான் (Manickavasagam, 2019).

## முடிவுரை

ஒரு வெள்ளைக் காகிதத்தில் சிறு கரும்புள்ளி போல நல்ல குணமுடைய சீனுவிடமிருந்த சபல புத்தியால் அவன் தன் வாழ்வையே இழந்தான். தன்னை நம்பி இருந்த குடும்பத்தையும் தவிக்கவிட்டு சென்றுவிட்டான். மனந்திரும்பிய பிறகும் அவனைத் தொடர்ந்த விதியானது அவனை வளைத்து விட்டது. இவனுடைய இறப்பிற்குப் பின் அவன் குடும்பம் எவ்வாறு காலந் தள்ளுகிறது என்று பின்வரும் நாவலின் போக்கு நமக்குக் காண்பிக்கிறது.

## References

Manickam, A. (2007) Naanmanikadikai, Vardhamanan Pathippagam, Chennai, India.

Manickam, S. (2012) Thirukkural Theylivurai, Manikavasagar pathippagam, Chennai, India.

Manickavasagam, G. (2019) Silapathiagram, Uma pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License